கையெழுத்துப் பிரதி

# நிதி (ஒய்வூதியம்) துறை

## அரசு ஆணை எண்.173 நாள் 1.4.2004

**(சுபானு , பங்குனி–19 , திருவள்ளுவர் ஆண்டு 2035)**

இறப்பு மற்றும் ஒய்வு பணிக்கொடை கால தாமதமாக வழங்கப்படும் பணிக்கொடைத் தொகைக்கு வட்டி வழங்குதல் – வட்டி விகிதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

படிக்க:

அரசாணை (நிலை) எண்.122, நிதி (ஒய்வூதியம்) துறை, நாள் 20.2.1995.

*****

**ஆணை:**

பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் பணியிலிருந்து ஒய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு கால தாமதமாக வழங்கப்படும் பணிக் கொடைத் தொகைக்கு ஆண்டிற்கு 12% கூட்டு வட்டி வழங்க அரசு ஆணையிட்டிருந்தது. அவ்வாணை பொது வருங்கால வைப்பு நிதிக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டது.

2. சமீபகாலமாக பொது வருங்கால வைப்பு நிதிக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதத்தினைக் கருத்தில் கொண்டு இனி பணியிலிருந்து ஒய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு காலதாமதமாக வழங்கப்படும் பணிக் கொடைத் தொகைக்கு, சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் ஒய்வு பெறும் ஆண்டில் அமலில் இருக்கும் பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி வீதத்தின் அடிப்படையில் கூட்டு வட்டி கணக்கிட்டு அளிக்க அரசு ஆணையிடுகிறது.

3. இந்த ஆணை 1.4.2004 முதல் அமலுக்கு வருகிறது.

4. தமிழ் நாடு ஒய்வூதியம் விதி 1978–ற்கு திருத்தம் தனியாக வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ந. நாராயணன்
வளர்ச்சி ஆணையர் (மற்றும்) செயலாளர்

**பெறுநர்:**

அனைத்து தலைமைச் செயலக துறைகள்.
செயலாளர், சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
ஒய்வூதிய துறை இயக்குநர், சென்னை–6.
கருவூல கணக்குகள் ஆணையர், சென்னை–15.
முதன்மை மாநிலக் கணக்காயர் (தணிக்கை–I), சென்னை–18.